உ

சிவமயம்.

திருமறைக்காடென்னும்

வேதாரண்ணிய க்ஷேத்திரத்தைச்சேர்ந்த

தேத்தாகுடி

# தர்மலிங்கசுவாமிகள் பேரில்

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
24 SEP 1915
MADRAS.

1005
3-15

# கும்மி, ஒயில்கும்மி, குறம்,

ஆனந்தக்களிப்பாகிய

# உடல்கூறு, பதங்கள்,

# கவி, திருப்புகழ்

இவைகளை

மேற்படி ஊர் மன்னப்பய்யன் கட்டளையில் வசிக்கும்

ஆறுமுகசுவாமிகள் குமாரர்

உபாத்தியாயர்

சின்னப்பாபிள்ளையவர்களாலியற்றி

---

நாகபட்டணம்

நீலலோசனி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டது.

1915.

---

[ இதன்விலை அணா ஒன்று. ]

Q23:417.2193
N15
223394

# சாற்றுகவி

முத்திபெற உந்தனுட பாதமதை யென்னாளும்
மொழியவெகு கவிபாடவும்

மோட்சமுதுவாகவே ஞானயோகந்தனில்
மொழிந்த நிலை தவறாமலும்

சித்தமா அஷ்டலெக்ஷிமிகளும்யெந்தனுட
சிந்தையில் குடிகொள்ளவும்

சிறியென்மேல் கிருபைவைத் தென்னாளுமுந்தனை
சேவிக்கவரந்தருகவும்

ஜெகமெலாம் புகழவுன் னகமுகிழ்ந்தருளவும்
செல்வமென் மேல்பெருகவும்

செப்பெரிய முப்பத்துமுக்கோடிதேவர்கள்
தேன்மாரிதான் சொரியவும்

சின்னப்பன் சொல்லிய செந்தமிழ்கவிகளது
சிறக்கவரந் தந்தருளுவீர்

தேவாதிதேவனே தர்மலிங்கேசனே
தேத்தி நகர்வாழீசனே

உ

சிவமயம்.

## காப்பு வெண்பா.

நாவு தவறாமல் நற்சொற்கள் மாறாமல்
ஆவி தடுமாறி யசையாமற் — பூவுலகை
ஆளுகின்ற மாவாணி அம்பிகையே யென்னாவில்
வாழும்படிக் கிசைந்து வா.

## கும்மி.

முத்தியளித்திடுந் தெத்திமாநகரில்
சித்துவிளையாடுந் தர்மலிங்கம்
பத்தியுடனுன்மேல் கும்மிபாட நல்ல
சித்திவிநாயகன் காப்பாமே.

எத்திசையும்புகழ் தெத்தியாநகரில்
பத்தியுடன் வெகுபேர்கள் கூட
வத்தராககும்மிப் பாட்டுறைக்க அந்த
பாலசுப்ரமண்யன் காப்பாமே.

அந்தரலிங்கமா வந்துதித்த அந்த
அய்யன் தர்மலிங்கஞ் சந்நிதியில்
வந்தனஞ்செய்தமே கும்மிபாட நல்ல
வாலைசரஸ்வதி காப்பாமே.

கருணைபுரியுந் தருமலிங்கப் பாதம்
காணவேணுமென்று கோடிஜனம்
தர்மலிங்கக்கோவில் சந்நிதியில்நின்று
தியானஞ்செய்கிறார் பாருங்கடி.

பால்பழஞ்சர்க்கரை தேன்பன்னீர்கொண்டு
பந்திபந்தியாகக் கூடிவந்து
வாலகுருபரன் தர்மலிங்கப்பாதம்
வாழக்கும்மி யடியுங்கடி. 5

கதலிபிலாதென்னை மாமரமும்புன்னை
கமுகுவில்வங்கொன்றைக் காவனத்தில்
மதலைக்குயில்கூவ தர்மலிங்கம்பாதம்
மகிழ்ந்துக் கும்மியடியுங்கடி. 6

வந்தவர்கள் கூடி ஸ்நானஞ்செய்ய நல்ல
செந்தாமரைப்பொய்கை தானுமுண்டு
அந்தமுடனேஜலக் கிரீடைகள்செய்து
சொந்தமாகக் கும்மியடியுங்கடி. 7

காணிக்கைகொண்டு வந்தவரும் பாற்
காவடி கொண்டுமே வாரவரும்
ஆணிபொன்கொண்டு வெகுஜனங்கள் கூடி
ஆலயம்வருவதைப் பாருங்கடி. 8

கெண்டாமணியோசை கேட்குதடி கண்ணால்
கண்டபிணியெல்லாந் தீர்க்குதடி
அண்டரண்டம்புகழ் தர்மலிங்கம்பாதம்
அன்பாய்ச்சேருவோம் வாருங்கடி. 9

குன்மவலிகுஷ்டம் பெருவியாதிகாசம்
குறித்தமகோதரம் பாண்டுசோகை
தர்மலிங்கங்கோவில் சன்னதிகண்டால்
தானாயோடிடும் பாருங்கடி 10

நந்தவனமுஞ்செந்தாமரைப்பொய்கையும்
வந்தவர்கூடியே வாசஞ்செய்ய
சொந்தமாகக்கட்டடங் கட்டியிருப்பதை
சூழ்ந்துக்கும்மி யடியுங்கடி. 11

முத்துவிளைந்திடும் தெத்திமாநகரில்
சித்தர்கள்கூடியே வாசஞ்செய்யும்
பத்தன்தர்மலிங்கம் பாதந்தன்னைக்கண்டு
பணிந்துக்கும்மி யடியுங்கடி.

வேண்டிக்கொண்டபேர்க ளமுதுசெய்து நல்ல
விதமாஅறுசுவை பாகம்பண்ணி
ஆண்டிபரதேசி ஜனங்கள்கூடியே
அன்னம்புசிப்பதைப் பாருங்கடி.

மத்தாளந்துத்தி பேரிகைசின்னங்கள்
நித்தமுழங்கிடுஞ் சன்னதியில்
பத்தியுடனின்று தர்மலிங்கம்பாதம்
பணிந்துகும்மி யடியுங்கடி.

அங்கமெல்லாம் ஒருலிங்கவுருவாக
அமைந்துவந்த தருமலிங்கம்
எங்கள்வினைகளைத் தீர்க்கவேணுமென்று
இசைந்துக்கும்மி யடியுங்கடி

அங்கம்புகழ்ந்திட சங்கமுழங்கிட.
அவரவர்கள் நின்றாடிடவும்
தங்கம்வழங்குந் தருமலிங்கம்பாதந்
தாழ்ந்துக்கும்மி யடியுங்கடி.

காத்தான்கறுப்பன் கழுவடியான்வீரன்
காட்டேரிஇருளன் தூண்டிக்காரன்
நாடாமல்ஓட்டிடுந் தர்மலிங்கம்பாதம்
நாடிக்கும்மி யடியுங்கடி,

கஸ்தூரிகுங்குமப் பொட்டுமிட்டு நல்ல
கதம்பங்களபந் தானணிந்து
விஸ்தாரமாகவே தர்மலிங்கம்பாதம்
விளங்கக்கும்மி யடியுங்கடி.

சாலொன்றகுலத்திற் பிறந்தவராம் நல்ல
தர்மவரம்பெற்று வந்தவராம்
வானம்புவிமுதல் தர்மலிங்கங்கோவில்
வழங்கிவருவதைப் பாருங்கடி. 19

பாருங்கடிபெண்காள் பாருங்கடி தர்மர்
பாதத்தைத்தொழுது வாருங்கடி
ஆருமறியவே தர்மலிங்கம்பாதம்
அன்பாகக்கும்மி யடியுங்கடி. 20

ஜென்மவினைகளுந் தீர்ந்துவிடும் வெகு
கர்மபிணியெல்லாம் ஓடிவிடும்
தர்மலிங்கம்பாதம் பணிந்தபேருக்குச்
சந்ததியுண்டாகும் பாருங்கடி. 21

காஞ்சிக்கரையிலே ஸ்நானஞ்செய்து அந்த
கர்ப்பகத்தடியில் பூஜைசெய்து
வாஞ்சையுடனே தர்மலிங்கம்பாதம்
வணங்கிக்கும்மி யடியுங்கடி. 22

வண்டாடுஞ்சோலை தெத்திநகர்தன்னில்
வாழுந்தர்மலிங்கங் கோவிலிலே
செண்டாடும்பெண்களே யெல்லோருமாகவே
சேர்ந்துகும்மி யடியுங்கடி. 23

பாதசரந்தண்டை கொலுசுகளும் பட்டுப்
பாவாடை ரவுக்கை தாவணியும்
பூவணிந்தகொண்டை குலைந்திடப்பேய்கள்
புலம்பியாடுது பாருங்கடி. 24

அஞ்சலென்றோர் முகம் பார்த்திடுவாரவர்
தஞ்சமென்றோர்பிணி தீர்த்திடுவார்
பஞ்சமாபாதகந் தீர்ந்துவிடுமென்று
பணிந்துக்கும்மி யடியுங்கடி. 25

நெஞ்சில்நினைத்திடச் சஞ்சலந்தீர்ந்திடும்
நிமிஷத்திலப்பிணி பறந்தோடிடும்
அஞ்செழுத்தாகிய தர்மலிங்கந்தன்னை
அன்பாய்சேவிப்போம் வாருங்கடி.

புட்பவனமும் பூந்தோப்பும் வெகு
பூர்வீகமான பனமரமும்
செப்பமுடனே தர்மலிங்கமவர்
யெப்போதும்பூசைகள் செய்தாரடி.

புட்பவனத்தைக் கண்டாலே வெகு
பூர்வீகஜென்ம வினைகளெல்லாம்
செப்பமுடனே பறந்துவிடுமென்று
தியானஞ்செய்குவோம் வாருங்கடி.

நந்தவனத்திலே ஸ்நானஞ்செய்து அந்த
நாதன் தர்மய்யாவைப் பூசைசெய்து
அந்திசந்திஉச்சி காலந்தவறாமல்
அன்பாய்ப்பூசைகள் செயயுங்கடி.

ஆலயஞ்சுத்தியே வாருங்கடி நீங்கள்
ஐயர்பாதந்தன்னைச் சேருங்கடி
ஞாலம்பொருந்திய தர்மலிங்கம்பாதம்
நாடிக்கும்மி யடியுங்கடி.

அஷ்டதிக்கெல்லாம் புகழ்படைத்த நல்ல
ஐயர் தர்மலிங்கங் கோவிலிலே
சட்டப்படித் தவறாமலேசன்னதி
சார்ந்துகும்மியடியுங்கடி

செண்பகம்பாதிரி கோங்குவில்வம்பன்னீர்
சிறந்தமல்லிகைரோஜா தும்பைகொண்டு
அல்லும்பகலுமே தர்மலிங்கம்பாதம்
அன்பாய் பூசைகள் செய்யுங்கடி.

சுத்திப்பிரதக்ஷணம்வாருங்கடி நல்ல
சூக்ஷமண்டபத்தைப் பாருங்கடி
சத்தியுடையிடப் பாகமமர்ந்திடும்
தர்மலிங்கத்தைப் பாருங்கடி.

கும்பிடுதண்டங்கள் போடுங்கடி நீங்கள்
கூடிக்கும்மிகளைப் பாடுங்கடி
அன்பன் தர்மலிங்கம் பாதந்தன்னைக்கண்டால்
ஜென்மவினையெல்லாந் தீர்ந்துவிடும். 34

பத்தியுடநின்று பாடுங்கடி அவர்
பாதந்தன்னைக்கொண் டாடுங்கடி
சித்தர்கள்கூடிய தர்மலிங்கம்பாதம்
சிறக்கக்கும்மி யடியுங்கடி. 35

ஆங்காரமுள்ளதோர் பேய்களெல்லாமவர்
அடித்துஓட்டி விடுவாரடி
நீங்காதபிணியை நீக்கிடுவாரென்று
நினைந்துக்கும்மி யடியுங்கடி. 36

ஜென்மப்பிறவியை மாற்றிடுவாரவரைச்
சேவித்தபேர்பிணி தீர்த்திடுவார்
வர்மப்படாமலே கார்க்கவேணுமென்று
வணங்கிக்கும்மி யடியுங்கடி. 37

பெண்களெல்லா மோடிவாருங்கடி பிற
சங்கங்கூடியதைப் பாருங்கடி
அங்கம்புகழ்ந்திட தர்மலிங்கம்பாதம்
அர்ச்சித்துக்கும்மி யடியுங்கடி. 38

மாங்குயில்கூவிய சோலையிலேரெண்டு
மயில்கள்கூடியே யாடுதுபார்
வீம்புகள்பேசாமல் தர்மலிங்கம்பாதம்
விளங்கப்பந்தடி பாடுங்கடி 39

வாருங்கடிபெண்காள் வாருங்கடி தர்மர்
வரந்தருகிறார் பாருங்கடி
வந்தனம்பண்ணியே தர்மலிங்கம்பாதம்
வாழிபாடி யடியுங்கடி. 40

தேசமெங்குந்தர்ம நருள்பெருக அந்தரத்
தேவர்கள்பூமாரி தான்சொரிய
தாசன்சின்னப்பன் பாடியகும்மியைச்
சார்ந்துமங்களம் பாடுங்கடி.

---

## ஒயில்க்கும்மி

(காப்பு வெண்பா.)

நாற்றிசையுங் கீர்த்திபெற்ற-நாதன்தர்ம லிங்கர்தன்மேல்
சாற்றுமொயில் கும்மிசொல்ல-தந்திமுகன் ஞானடியே காப்பு.

சித்தமகிழ்ந்து தர்மலிங்கம்பாதம்
சிறக்கக்கும்மி தமிழ்ப்பாட
சிறியேனுன்-பெரிதாகிய-குருவாசக-பொருள்பாட
சித்திவிநாயகன் காப்பாமே.

தெத்திநகர்தன்னில் வாழுங்குருபரன்
முத்திய நல்பெற வேணுமென்று
சித்தத்தினில்-முத்திக்கருள்-வைத்துப்பொருள்-சித்தித்தி
வெத்திவேலாயுதன் காப்பாமே

வந்தனஞ்செய்தமே தர்மலிங்கம்பாதம்
மகிழ்ந்துக்கும்மி தமிழ்ப்பாட
வந்தும்புகழ்-சங்கம்பெற பொங்குங்கடல்-தங்கும்மணி
வாலசரஸ்வதி காப்பாமே.

சங்கப்பிரசங்கமாய் பொங்குங்கடல்போல
ஜனங்கள்வந்தமே கூடிடவும்
சரசத்துட-னொருமித்துமே-குருசித்தமா-வருவித்தி
தர்மலிங்கக்கோவில் சன்னதியில்

பூங்காவனமும் அன்னசாலையும்
புண்ணியமானதோர் தீர்த்தங்களும்
புனிதத்துட-னருளைத்தரும்-புனல்சுத்தியாவனமுற்றி
புகழ்ந்துஜனங்கள் கூடிடவும்.

பூர்வத்தில்செய்த வினைகளெல்லா மந்தப்
புண்ணியவான் தர்மலிங்கர்பாதம்
போற்றிமலர்-சாற்றிக்கர-மேற்றிவினை-யைத்தீர்த்திடும்
பூலோக தர்மலிங்கமடி. 6

கண்ட கண்ட பேய்களெல்லாங் கூடியங்கே
சென்டுகொண்டுவிளை யாடினாலும் [டும்
கூனைப்போதவர்-மனம்வைத்திட-கணப்பூதமே-பறந்தோடி
கர்த்தன் தர்மலிங்கம் சன்னிதியில் 7

தொந்தமுடன்தர்மர் பேரைச்சொன்னாலங்கே
வந்தபிணியெல்லாம் நீங்கிவிடும் [நீ
சுகுர்தத்துட-னநேகப்பேற-தொழுதுப்பணி-மனம்வைத்து
தோத்தமுடன்கண்ணால் பார்த்திடுவாய். 8

தெய்வீகங்கூடிய தர்மலிங்கம்பாதம்
சேவிக்கவே வெகு பேர்கள்கூடி
சிகமேவிய-குருநாதனை-புனலாடிய-வனமீதிலே
சேர்வடிபணிய வந்தனரே 9

எத்திசையும்புகழ் தேத்தாக்குடியிலே
ஈசனுருவா யமர்ந்துவந்த
இஷ்டப்படி-ரக்ஷித்திட-துஷ்டப்பிணி-யதுதீர்த்திடும்
யீசன்தர்மர்பாதம் பணியுங்கடி. 10

காந்தமலைபோலே தேத்தாக்குடிதன்னில்
கர்த்தன் தர்மலிங்கஞ் சன்னிதியில்
கனமோகமா-வனமீதிலே-கதிதாவென-பதமாமலர்
கண்டுபணிகுவோம் வாருங்கடி. 11

சோதிப்பிரகாசமா நின்றுகொண்டு அவர்
ஸ்தூலசரீரத்தை விண்டுநின்று
சுகுர்தத்துட-னருளைத்தரும்-சுகமுற்றிட-குருசித்தரை
தோத்திரஞ்செய்கிறார் பார்த்திடுங்கள். 12

புதுமையிது வெகு புதுமையைப்பாரடி
புண்ணியவானவர் சன்னதியில்
புகழ்பொங்கிட-அருள்தந்திட-பொருளுங்கை-வசம்வந்திட
புண்ணியவானவர் யெண்ணிடுவார்.

பாற்கடல் பொங்கிய வாரதுபோல்தர்மர்
பாதத்தைப் பணியவந்தவர்கள்
பதமாமலர்-கதிதாவென-பலபேர்களும்-மதிமோகமா
பாதம்பணிகிறார் பாருங்கடி.

கார்க்கவேணுங்கண்ணால் பார்க்கவேணுமென்று
கர்த்தன் திருவடியைத் தொழவே
கருணைக்கடலமூர்த்தத்தளி-கதிபெற்றிட-மனம்வைத்துமே
காக்ஷிதந்தாளவும் வேணுமய்யா.

முற்றும்பிழைகள் பொறுத்திடுவாயென்று
சித்தர்பாதமதை யான்தொழவும்
முனையாகிய-சுழிமீதிலே-நினைவாகிய-பொருள்தாமென
முக்காலும் பாதத்தை நம்பினனே

பொன்னுநவமணி பூண்டதுபோலவர்
பூலோகதெய்வீகச் சன்னிதியில்
பிரதக்ஷண-வலம்வந்திட-பிறவிப்பிணி-யதுதீர்ந்திடும்
பூலோகதர்மர் சன்னிதியில்.

சின்னஞ்சிறியேநான் பாடியகும்மியை
சித்தமகிழ்ந்து பிழைபொறுத்து
ஜெகமெங்குமே-புகழ்பொங்கிட-தருகும்படி-மனமங்கள
சின்னப்பன்பாடிய கும்மியடி.

ஒயில்க்கும்மி முற்றிற்று

## குறம்.

னதெந்தினா தினதெந்தினா தினதெந்தினா தினனா
தன்னாதி னாதெந்தினா தினதெந்தினா தினனா.

குறம்பாடிக் குறியுரைக்கும் குறவர்குலம் நாங்கள்
குருவான தர்மலிங்கம் கோவில்தனை நாடி
சிரங்குவித்துக் கையெடுத்து சிரமேல்கரம் வைத்து
சிவதரும லிங்கந்தனை சேவடிகள் பணிந்து
தெத்திகுடி நகரதனில் சிவனடியைப் பணிய
முத்திதருங் குருபரனை முதல்வனையும் நாடி
சத்தியுமை புத்திரரை சங்கரரைப் பாட
தருமர்சபை குறம்பாடக் கரிமுகனே காப்பு. (தெ)

மலைமீதில் குடிசைகட்டி வாழ்ந்தகுறச்சாதி
மலைச்சுனையில் நீரருந்தி வளர்ந்தகுறப் பெண்கள்
அலமேலு மங்கையே நீ அருங்கிளியே வருவாய்
அம்மை சிவகாமியேஎன் அங்காளம்மைத் தாயே
சத்தகன்னி யுத்தமியே செங்கமலத்தாயே
தருமலிங்கஞ் சபைதனிலே தையலரே வருவாய்
எத்திசையும் புகழ்பெருக யிசைந்தகுறம் பாட
சத்தியுமை பெற்றெடுத்த சண்முகனே காப்பு. (தெ)

ஆலவிடந் தன்னையுண்ட ஐயனருளாலே
அமைந்தாரடி தர்மலிங்கம் புன்னைமரச் சோலை
வாலகுருபரனா மந்தவளர் தருமலிங்கம்
மனையாட்டி தேவியுமை தங்கமடியம்மை
கோலமணி மேடையிலே குரு தருமலிங்கம்
குலதெய்வ மாகவந்து குதித்தாரடி யம்மை
தர்மலிங்கம் பதமலரைச் சார்ந்துகுறம் பாட
தாமரைப் பூமேலிருக்கும் சரஸ்வதியே காப்பு. (தெ)

தெத்திகுடி நகரதனில் சிவதருமலிங்கம்
சிறந்துமிக அருள்பெருகச் சிவகுருவாய் வந்து
தேசமெங்கும் மானிடர்கள் செய்தவினை தீர்க்க
சித்துவிளை யாடவென்று சிந்தைதனில் நினைந்து
சிர்ச்சபையில் வச்சிரமணிச சிவனுருவாய் வந்தார்
கோடானு கோடிஜனங் குருவடியைப்பணிய
கோடிஜனங் காவடிகள் கொண்டுமிக வருக
குறைதீர்க்குந் தர்மலிங்கம் பதமலரைப் பணிவோம். (தெ)

சின்னக்காஞ்சி பெரியக்காஞ்சி செவ்வல்லி யோடை
சிவதருமர் பூசைசெய்யும் பனமரத்தின் மேடை
செப்பெரிய முப்பத்திமுக்கோடி தேவர்
சித்தம்வைத்து முத்திதருஞ் சிறந்தகுருவடியே
ஜென்மவினை பிணிகளெல்லாந் தீர்த்திடுங் கண்மணியே
நந்தவனக் கெங்கையிலே ஸ்நானங்களுஞ் செய்து
நர்மர்லகள் புட்பவகை வில்வங்களுங் கொய்து
சித்தமுடன் தர்மலிங்கம் திருவடியைப் பணிவோம். (செ

சயரோகம் பெருவயறு சத்திருன்மங்காசம்
சன்னிசுரங் குன்மவலி சலரோகம் யீளை
மகோதரம் வெண்குட்டமோடு மந்தாரகாசம்
மாரடைப்பு கல்லடைப்பு மாணிலிங்கப் புற்று
அஸ்திவெட்டை றெத்தமொடு அழிவெட்டை மேகம்
அடிமூலக் கிருணிமூலை அந்திரவாய்வு பாண்டு
அண்டவாதம் கண்டமாலை அரையாப்புக் கடிகை
தொண்டைக்கட்டுச் சிலேற்றுமங்கள் அண்டன்வலிவாய்வு. (செ

விஷப்பாண்டு விர்ப்புரிதி விக்கலோடுக்கல்
மேசசூலை கிரந்திசொறி பச்சைவாதம் மாந்தம்
காக்கைவலி கொறுக்கைவலி காமாலைபீனசங்கள்
கண்ணுவலி புண்ணுபுரை கனப்டுவன் பௌத்திரம்
வயரிசுவு பொருமல்யேப்பம் வண்டுகடி சிக்கல்
வாந்தியொடு சோம்பல்வலி வந்தபிணி யெல்லாம்
வளர் தருமலிங்கர் பதம்வந்து பணிந்திடவும்
நாடாமல் ஓட்டிவிடும் நாதனடிபணிவோம்.

---

பதம்

பல்லவி

கொண்டாடனடிக்கிறார் தர்மலிங்கம்
கோவிலைக்கண்டு பாடியாடிக் கொண்டாடனடிகிறார்

அனுபல்லவி.

தொண்டர்கள்கூடிய சிற்சபையைக்கண்டு
தோத்தமுடன் கண்ணால் பார்த்திடலாமென்று.

அந்தரலிங்கத்தை வந்தனஞ் செய்திட
சொந்தமானபிணி பறந்தோடிட
சிந்தைமகிழ்ந்து ஜனங்கள் கூடிய
தேசமெங்கும் தர்மலிங்கத்தைப் பாடியே (கொ)

கெங்காநதியிலே ஸ்நானங்களுஞ்செய்து
அங்கன்னியாசபூசை யவரவர்செய்து
பொங்கமுடன் பிரதக்ஷணம் வந்து
புகழ்ந்துமே தர்மலிங்கத்தைப் பணிந்து (கொ)

சண்டன்வருமவே சண்டனஞ்செய்திட
பண்டுசெய்தபாவம் யின்று பறந்திட
வண்டாடுஞ் சோலையைக் கண்டுமகிழ்ந்திட
வளர்ந்த லிங்கத்தைப் பணிந்து போற்றிடக். (கொ)

மத்தாள தாளங்கள் தித்திமுழங்கிட
மகிழ்ந்து பதங்கள் புகழ்ந்துபாடிட்
சுத்தமுடன் வெகுபேர்கள் கொண்டாடி
சூழ்ந்து சுந்தரலிங்கத்தைப் பாடியே. (கொ).

பட்டுப்பாவாடையு மிடையில்தரித்து
பந்துஸ்தனம் ரெண்டும் ரவிக்கைபூரித்து
தங்கஒட்டியாணத்தை உடைமேல் வரித்து
தாவணிச்சல்லாவை மேலினில் விரித்து. (கொ)

அண்டாண்டங்களு புகழ்ந்து போற்றிட
ஐய்யன் தர்மலிங்கம் மனம்களித்திட
தொண்டர்கள் கூடியே கரங்குவித்திட
சோதிப்பிரகாசத்தைக் கண்டுமகிழ்ந்துமே. (கொ)

சித்தர்கள் நாடிய சிர்ச்சபைதன்னிலே
சிறந்தமங்களம் பாடிய பெண்களே
பத்தன்சின்னப்பனிசைத்தபதத்தை
முற்றும் பிழைகள் பொருத்திடப் பணிந்து. (கொ)

---

## பதம்.

சற்றேங்கிருபை செய்யலாகாதா சாமிதர்மலிங்கம் யென்மேல்லாதா
பத்தியுடன் னத்தினன்யான் சித்தியருளுத்தமனே (சற்றே

முத்தாய் முளைத்தசோதி முழுதாம்மெனக்குச்சாதி
பத்தருளம் முத்திபெற வைத்துநினை பெற்றவனே (சற்றே

தங்கத்தம்மைபாகா சாதித்திடலாகாதா
சரசத்துட னறுளைப்பெற புகழுத்தம பொருள்பெற்றிட (சற்றே

கொடியவினையைப் போக்கி குழந்தைவருமை நீக்கி
குருவாகவே வருவாயருள் தருவாயென் குருவே (சற்றே

மல்லிகை முல்லையணி மார்பா மலர்ப்பதந் தொழுமெனக் கருள்வாய்
மருமாமலர் சொரிவாயுன் மதனைக்கருள் புரிவாய் நீ (சற்றே

---

## பதம்,

### பல்லவி.

வந்து ரெக்ஷிக்கவேணும் யெந்தன்குருவே
வந்து ரெக்ஷிக்கவேணும். (வந்து

### அநுபல்லவி.

வந்திரக்ஷிக்கவேணும் மலர்பாதமருள்தோணும்
வதன சுந்தரபோதா சற்குருவே குருநாதா (வந்து

### சரணங்கள்.

சண்பகமலர்பாதா தர்மலிங்க நாதா
சகல லக்ஷணநீதா தாசனுக்கருள் போதா
சத்தியுமையவள் முத்திபெற்றிட நத்திமானிடர் சுத்திமொய்த்திட
சித்தம்வைத்துமே பத்தருக்கருள் தெத்திமானகர் சத்திபாலனே.

கொடியவினைகளெல்லாம் பொடிபொடியாகச் செய்யும்
கோடிசூரியப்ரகாசா குழந்தைக்கருள்வா யீசா
கோலமாமணி மார்பனேவெகு வாசமலரணினேசனே
கோடிகோடி விலாசனே, யுனைத் தேடினேன் கைலாசனே நீர் (வந்து

அஷ்டாக்ஷரப்பொருளே பொன் அடியை யெனக்கருளோ
அடியேன் படுந்துயரம் அறியாயோ இன்னேரம்
அடியனுக் கருள்புரிகுவாய் அருமையாய் வரந்தருகுவாய்
சிறியனுக்கருள் பெரிகிடும்படி சித்தம்வைத்துன் னைத்தனப்படி (வந்)

பாசமலர்ப்பதத்தை பாசமுடனேதொழுந்
தாசன்சின்னப்பன் சொல்லுந்தமிழ் மொழிக்கருள் புல்லும்
சங்கரா உலகாண்டவேதனே பொங்கரம்பணி பூண்டனாதனே
சந்ததம்மெனக் கின்றருள்புரி சாமிநாதனை நம்பினேன் மனம் (வந்து)

---

## ஆனந்தக்களிப்பு

தனனதன தனதந்த னானா—தன்னந்
தானத்தனதந்த நாதந்தனானா

தெத்திகுடி நகரதனில்வாழும்-அந்த சிவதரும லிங்கமவர் திருவடியை
டாரும், பார்த்தவர்கள் துன்பவினை தீர- பரமகுரு வாய்வந்து வழங்கியதை
டாரும், ஆத்தாளைப் பூசிக்கவேணும்-நல்ல அம்பிகையின் பாதமலர் நம்பி
ரபேர்க்கு, தோத்தாமலோடிவிடுந்துன்பம்-வெகு சுகுர்தமுடனென்னாளுந்
ருணை தரவேணும், எற்றபடி வரமருளவேணும்-நான் இசைந்தபடி சுழிமு
னையில் சுடரொளியேதோணும், நாட்டாதே வேறுவழிமனதை-அந்த நாத
ருள் திருவடியை மறவாதேமனமே, ஆற்றுமத்தைப் பூசைசெய்யும்பாதன்
ல்ல அருள்பெருகப் புகழ்படைத்த தர்மலிங்கனாதன், சூஸ்திரத்தில்வெகு
த்தியோகன்-இந்தத் தொல்லுலகி லுள்ளவர்கள் பிணிதீர்க்கும் நாதன்,
வரத்த கசிதமணிமேடை-அந்த நாதர்பதம் யெப்போதும் சாம்பிராணி
—, பரிமளசுகந்த மலர்வாசம்-அந்தப் பரமகுருநாதனடி பணிவர்கள்
நசம், சின்னகாஞ்சி பெரியகாஞ்சிரெண்டு-அந்த சிவதருமர் பூசைசெய்யும்
னமரத்தைக்கண்டு, பத்தியுடன சுத்திவலம்வந்து-அந்தப் பனமரத்
ன் மேடையிலே சிரங்குவித்துநின்று, தர்மலிங்கம் பதமலரைநோக்கி-
ங்கே சாஷ்டாங்க தெண்டனிட சகலபிணிநீங்கும், அண்டரண்ட புவன
தல்தோணும்-அங்கே அடங்காத பேய்கள்முதல் ஓடிவிடுங்காணும், எண்
சையுந் தொண்டர்கள் கூடி-அந்த இகபரமிரண்டுக்கு மொருவழியே நாடி,
ண்டுபழிசெய்த வினையெல்லாம்-அவர் பனமரத்தைக் கண்டாலும் பறந்
விடும் நல்லா, தர்மலிங்க னாதனருளாலே-நல்ல சந்ததிசனுண்டாகு முப்
பாருளினாலே, என்பாசமணுகாது பாரும்-அந்த யீசனுட பாதமதை யெப்
பாதுங் காரும், சத்தியுமை புத்திரரே வாரும்-சிவ தர்மலிங்க னாதாவென்
ன்பவினை தீரும், தேவர்முதல் சித்தர்முனி வாழ்த்தும்-அந்தச் சிவதரும
ங்கர் பதச்சுடரொளியே தோற்றும், ஓடாதபேய்கள்முதலோடும்-மனதை

யொருவழியாய்த் தர்மலிங்கம் பதமலரைனுடும், கோடானு கோடிவினை தீ
ரும்-அந்தக் குருவான தர்மலிங்கம் பதமலரைநாடும், பத்தியுடன்பாதமதை
கண்டு-அந்த பரலோக பரமபதம் பணிகுவாயின்று, சிவலோக கைலாசர்
தோனும்-அங்கே சிதராமல் மனமதனையொருவழியிலூனும், சகலகலைய
ர்தகுணசீலன்-நல்ல தாசன் சின்னப்பன்செந்தமிழ் மொழியும்பாலன், க
மணி ரத்னம்பொன்னுடை-வெகு கனமாகத்தருகின்றார் தர்மலிங்கர்வான

---

## திருப்புகழ் காப்பு-

திருப்புகழெனக் கருள் குருப்பதமிகப் பெற
க்ஷனப்பொழுதினைத் தொழவுமென்
மனத்துயரறுத்திட ஜகத்தினில் சினைத்தவர்
வினைப்பிறவி யற்றுவிடுமாக்
கணக்கங் கணங்களொடுணக்குஞ் சரபபதம்
மணக்கும் படிப்பணிகுவாம்

தேத்துங்குடியுறை சாற்றுஞ் சமாதியில்
தோத்தும்படி சிவமூர்த்தியின் வடிவமாய்
பார்த்தவர்கள் மிகத்தோத்திரஞ் செய்திட
நாத்திசையோர் கரமேத்திப் பணிந்திடுங் குரு

சாஸ்த்திரவேதங்கள் பார்த்து உணர்ந்திடும்
பாத்திரச்சான்குல கோத்திரத்தில் வெகு
கேர்த்தியுடன் வரும் சூஸ்திரப் பேய்களை
மாற்றிவிடும்படி போற்றிப் பொன்னடி பணிவே

சாற்றும் மலர்ப்பதம் போற்றிப்பணிந்திட
தோற்றுந் திருவிக்கேற்றும்படிக் கருள்
பார்த்தன் மலர்ப்பதம் போற்றுன் மதலையை
கார்த்துவிடும்படி தோத்திரஞ்செய எனக் கருள்வ

சூழ்த்திரப் பொமமைபோல் பார்த்துநடனமிடும்
வேற்றுமைப் பேய்களை யோட்டிவிரட்டிட
பார்த்தன் மலர்ப்பதம் சாற்றித்திருவடிக்
கேற்குமஞ்சிறியவன் ஒரு ழுவே

---

## வேறு

முத்திக்கருள் தரும் ரத்நப்பதமலர்
சித்தத்தினில் மிகவைத்துன் மலரடி — பணிவேனே

...ற்றும்பொருள்பல பேர்க்குன் னருள்தர
...தாற்றும்படி வரும் தேத்துங்குடிதனி — லுறைதவோனே

...ாற்றுன் மனமிசைசாற்றுன் கிருபையை
...ார்த்தென் மனதினில் தோத்தும்படியெனக் — கருள்வாயே

...ற்றுங் கொடிமுடி தோத்தும்படிவெகு பேர்க்குன்
...ாமருள் மூர்த்தியெனவருங் — குருநாதா

## வேறு

ஆதிமூலநாதன் சோதியானபாதன்
...தசாமிசேஷன் தியாகராஜவேஷன் — சிவநாதன்

...வேதம்நாலும்ஓதும் ஞானபோதயோகன்
கோதிலாதபாதன் சோலைசூழ்விலாசன் — தர்மநாதன்

சத்திமுத்திபாதன் சித்திவெற்றிநாதன்
தத்துவப்பிரகாசன் நித்தமலர்கள்வாசன் — வெகுயோகன்

தங்கத்தம்மைபாகன் திங்கள்குடைவிலாசன்
பொங்குங்கடல் மணிநாதன் யெங்கள்குலமருள் — குருநாதா

## வேறு.

...சமரகதம் வச்ரப்பொடிமிக
...வத்து யிழைத்ததோ ரத்நக்கிரிகட — முடிமீதில்

...டுத்துயிலுடை கட்டித்தொங்கிட எட்டுத்திசைகளும்
...ட்டும்படிபுகழ் பெற்றுன்கிருபையை வைத்தென்மனதினில் நினைவேனே

...டப்படிமலர் கொட்டிப்பதமதில் குட்டிச்சிரசினில்
...டிக்கரமிசை கட்டிக்கைதொழும் பததாக்கருள் தரும்
...த்தாக்குடிதனில் நித்தம்பொன்னடி — பணிவேனே

...ஒப்பதுவுனன் நித்தம்பாடிடவைத்துன் மனதினில்
...த்தென் குறைகளைத் தீர்த்துன்னருள்பெற சாற்றும்படி
...யேற்றும்படியென மூர்த்திகர... — குருநாதா